www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முழு ஆண்டுத் தேர்வு - 2023

**9 - STD** பதிவு எண்.

## தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு.** *15 x 1 = 15*

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை இயற்றியவர் ______
அ) கால்டுவெல் ஆ) ஹோக்கன் இ) பிரான்சிஸ் எல்லீஸ் ஈ) வில்லியம் ஜோன்ஸ்
2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி அடிக் கோடிட்ட செற்களுக்கான இலக்கணக் குறிப்பு
அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை
3. 'மல்லல்' மூதூர் வய வேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள்.
அ) மறுமை ஆ) பூவரசமரம் இ) வளம் ஈ) பெரிய
4. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம்
அ) சீவக சிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) வளையாபதி
5. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே – இவ்வடிக்கு அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
6. அடையாற்றில் புற்றுநோய் மருத்துவமனை நிறுவப்பட்ட ஆண்டு ______ நிறுவியவர் ______
அ) 1982, ரமாபாய் ஆ) 1952, முத்துலெட்சுமி
இ) 1960, ஐடாஸ் சோபியா ஸ்கட்டா ஈ) 1970, சிவகாமி
7. தென்னகத்துப் பெர்னாட்ஷா என்று அழைக்கப்பட்டவர்.
அ) காமராஜர் ஆ) தந்தை பெயரியார் இ) அறிஞர் அண்ணா ஈ) திரு.வி.க
8. 'முண்டி மோதும் துணிவே இன்பம்' – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது.
அ) மருட்சி ஆ) துணிவு இ) மகிழ்ச்சி ஈ) வியப்பு
9. தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரி அமைந்துள்ள இடம்.
அ) கும்பகோணம் ஆ) சுவாமிமலை இ) மாமல்லபுரம் ஈ) மதுரை
10. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்ப்பாடு யாது?
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு
11. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?
அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை
12. பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி
அடுப்பிடு சாந்மோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு வனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தேய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே
இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) பெரியபுராணம் ஆ) சிறுபஞ்சமூலம் இ) இராவணகாவியம் ஈ) மணிமேகலை
13. இப்பாடலை எழுதிய ஆசிரியர் யார்?
அ) சாத்தனார் ஆ) சேக்கிழார் இ) காரியாசான் ஈ) புலவர் குழந்தை
14. 'சாந்தம்' – இச்சொல்லின் பொருள் என்ன?
அ) நறுமணம் ஆ) சந்தனம் இ) தேன் ஈ) இறகு
15. பொருளெலாம் – பிரித்தெழுதுக.
அ) பொருள் + எல்லாம் ஆ) பொருட் + எல்லாம்
இ) பொருள் + எலாம் ஈ) பொருட் + எலாம்



CamScanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**II. ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி.** 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
   அ) 'பெண்ணடிமை தீரும் வரை மண்ணடிமை தீருமோ' என்று முழக்கம் செய்தவர் பாரதிதாசன் ஆவார்.
   ஆ) உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுவது ஜூன் 5.
17. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
   காடும் உடையது அரண் – இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?
18. கருக்கொண்ட பச்சைபாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.
19. படிமணல் மாற்றுமின், புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டி பொருள் விளக்குக?
20. கழுகுமரம் எதைத் தேடியது?
21. 'தலை' – என்று முடியும் குறளை எழுதுக?

**III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** 5 x 2 = 10

22. இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.
   சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
23. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – இத்தொடரின் வகைகளைச் சுட்டுக?
24. யாப்பின் உறுப்புகள் யாவை?
25. பகுபத உறுப்பிலக்கணம் தருக : அறைந்தனன்
26. கலைச்சொல் தருக : அ) Personality ஆ) Hero stone
27. இடவாகு பெயர் என்றால் என்ன? எ.கா. தருக?
28. பிழைநீக்கி எழுது?
   அ) குழலியும் பாடத் தெரியும்
   ஆ) நல்ல தமிழ்க்கு எழுதுவோம்

**IV. ஏதேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** 2 x 3 = 6

29. மருத்துவர் முத்துலெட்சுமி சாதனைகளைக் குறிப்பிடு?
30. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடு?
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக?

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க 91 நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார். 1943 ஆம் ஆண்டு சூலை மாதம் 9 ஆம் நாள் பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெருங் கூட்டத்தில் டெல்லி நோக்கிச் செல்லுங்கள் (டெல்லி சலோ) எனப் போர் முழக்கம் செய்தார். இவரின் வேண்டுகோள் அனைவரது மனத்திலும் பசுமரத்தாணி போல் பதிந்தது.

நேதாஜி தலைமையில் இருந்த இந்திய தேசிய இராணுவப் படை பிரித்தானிய அரசை எதிர்த்தது. அப்போது தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார். இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான் இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்.

<u>வினாக்கள்:</u>

1. டெல்லி நோக்கிச் செல்லுங்கள் என்ற போர் முழக்கம் செய்தவர் யார்?
2. இந்திய தேசிய இராணுவத்திற்குப் பெரும்படையைத் திரட்டி வலுசேர்த்தவர் யார்?
3. தமிழக இராணுவ வீரர்கள் குறித்து தில்லான் கூறியது என்ன?



CamScanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

**V. ஏதேனும் 2 வினாக்களுக்கு விடையளி. (34 வது வினா கட்டாய வினா) 2 x 3 = 6**

32. விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக?

33. பழங்களை விடவும் நசுங்கிப் போனது – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?

34. 'காடெல்லாம் கழைக்கரும்பு' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல் (அல்லது) அள்ளற்பழனத்து – எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடல்

**VI. ஏதேனும் 2 வினாக்களுக்கு விடையளி. 2 x 3 = 6**

35. வஞ்சப் புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக?

36. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுது?
(குவிந்து – குவித்து; சேர்ந்து – சேர்த்து)
அ) தலைவர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் ______; அவருடைய நண்பர்கள் அன்பளிப்புகளைக் ______
ஆ) திருவிழாவில் மக்கள் ஒன்று ______ ; பொருட்களை வாங்கிச் ______ மகிழ்ந்தனர்.


37. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை – இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்ப்பாடு எழுது?

**VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 5 x 5 = 25**

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுது? (அல்லது)
ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக?

39. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டி தொகுப்புரை உருவாக்குக? (அல்லது)
ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுது?

40. காட்சியைக் கண்டு கவினுற எழுது?



41. நயம் பாராட்டுக:
"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமைஉடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உள்ளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்ததாலே" – வள்ளலார்



CamScanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

42. அ) மொழிபெயர்க்க:

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

(அல்லது)

ஆ) வீட்டிலும் பள்ளியிலும் நீ கடைபிடிக்க வேண்டிய செயல்களை எழுது?

**VIII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** 3 x 8 = 24

43. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுது?

(அல்லது)

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கழுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் விளக்கி எழுது?

(அல்லது)

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக?

45. அ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுது?

(அல்லது)

ஆ) சாலை பாதுகாப்பு குறித்து கட்டுரை எழுது?



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
CamScanner